விலை ரூபா 1-00

இப்பொழுது
நடைபெறுகின்றன
G.C.E. O/L
தரம் 9
BOND
INSTITUTES
யாழ்ப்பாணம் (6262)

# ஈழநாடு
THE EELANADU

G.C.E. A/L
விஞ்ஞானம் - வர்த்தகம் - கலை
வகுப்புகள் மீட்டல்
(DAY CLASS)
புதிய வகுப்புகள்
நடைபெறுகின்றன
BOND
INSTITUTES
யாழ்ப்பாணம். (6261)

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)
மலர் 25 மாசி 12 ஜ. அவ். 10 இதழ் 14
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 24—2—83

PUBLIC LIBRARY
JAFFNA

★ "ஐ. நா. உலக உணவு விவசாய நிறுவன அமைப்பின்கீழ்

# பனங்கைத்தொழில் நாடுகள் அபிவிருத்தித் திட்டம் உருவாக வேண்டும்"

## சர்வதேசபனைவளமாநாட்டில் இந்தோனேஷிய பிரதிநிதி யோசனை

(யாழ்ப்பாணம்)

"பனைமரத்தை மூலவளமாகக் கொண்டிருக்கும் ஒவ்வொரு நாடும் தனித்து இயங்காது, பரஸ்பரம் கூட்டிணைந்து, அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தவேண்டும். ஐக்கிய நாடுகள் உலக உணவு விவசாய நிறுவன அமைப்பின்கீழ், 'பனங் கைத்தொழில் நாடுகள் அபிவிருத்தித் திட்டம்' என்ற அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்" என்று இந்தோனேஷிய பிரதிநிதி திரு. ஜெம் பொங் ரிட்ரோ சோமோ யோசனை தெரிவித்துள்ளார்.

யாழ். நகரில் சிறப்புடன் நடைபெற்றுவரும் சர்வதேச பனைவளத் தொழிற்பாட்டு மாநாட்டின் 3-ம் நாளான நேற்று நடைபெற்ற ஆய்வரங்கின் போது தமது ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றுகையின்போதே மேற்கண்ட யோசனையை அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

"பனைவளம் குறிப்பிட்ட ஒரு சில நாடுகளுக்கு மட்டும் சொந்தமானவையாக இருக்கக் கூடாது. உலக நாடுகள் யாவற்றிலும் பனைமரம் பரம்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆலால் உடலில் காணப்படும் குண்டு
### 5 நாளின் பின்னர் நிலைமை தெரியும்

[யாழ்ப்பாணம்]

துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கான கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரத்துக்கு யாழ். ஆஸ்பத்திரியில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின் போது, வலதுபக்க இடுப்புமூட்டுப்பக்கமாகக் காணப்பட்ட ஒரு குண்டு அகற்றப்படவில்லை. வலது தொடை ஊடாக பாய்ந்த குண்டு இடுப்புமூட்டு எலும்பு வரை சென்று தடைபட்டுள்ளது.

இக் குண்டு இருப்பதால் உடலில் பாதிப்பு ஏற்படுமா என்பது 5 நாட்களின் பின்னரே

(8-ம் பக்கம் பார்க்க)

## நிறைவேற்றுகுழுவிலிருந்து ஐ.தே.க. உறுப்பினர் வாபஸ் பெறும்வரை பகிஷ்கரிப்பு!
### வவனியா மா. ச. தலைவர் அறிவிப்பு

[வவனியா]

வவனியா மாவட்ட அபிவிருத்தி சபையின் நிறைவேற்றுக்குழுவில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட ஐ. தே. கட்சி உறுப்பினரின் நியமனம் வாபஸ் பெறப்படும்வரை நிறைவேற்றுக்குழுக் கூட்டத்துக்குத் தாம் செல்லப் போவதில்லையென்று சபைத்தலைவர் திரு. எம். சிற்றம்பலம் தெரிவித்தார்.

அடுத்தடுத்து நடைபெற இருக்கும் நிறைவேற்றுக்குழுக்

[8-ம் பக்கம் பார்க்க]

## "பலம் வாய்ந்த எமது இயக்கத்தை சின்னாபின்னமாக்காதீர்கள்'
### இளைஞர்களுக்கு 'சிவா' கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"நண்பன் திரு. ஆலாலசுந்தரத்துக்கு நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் அதிர்ச்சியையும் வேதனையையும் தருகிறது. இந்த ரீதியில் சென்றுகொண்டிருந்தால் இது எங்கேபோய் முடியுமென்பதை இச் செயலுக்குப் பொறுப்பானவர்களும், அதற்குப் பின்னணியில் உள்ளவர்களும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்."

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பி. யுமான திரு. எம்.

[8-ம் பக்கம் பார்க்க]

சர்வதேச பனைவளத் தொழிற்பாட்டு மகாநாடு

பெண்களுக்கான
விசேட நிகழ்ச்சி

காலம்:- 24-2-83 பி. ப. 2 மணி
இடம்:- யாழ். வீரசிங்கம் மண்டபம்

பனம் உற்பத்திப் பொருட்களிலிருந்து நவ நாகரிக உணவு வகைகள் தயாரிப்பு, செய்முறைப் பயிற்சி திருமதி கைமா சோமசேகரம் அவர்களால் நடாத்தப்படும்.

பிரவேசக் கட்டணம் இல்லை

கவனிக்க:- முன்னர் அறிவித்தபடி இந்நிகழ்ச்சி யாழ். நகரமண்டபத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது

க. நடராசா
தலைவர்
பனம் பொருள் அபிவிருத்தி சபை

6307

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று வகுப்புகளைப் பகிஷ்கரிக்கின்றனர்

[ஏ. வி. மாணிக்கம்]

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டு, இலங்கையிலுள்ள சகல பல்கலைக்கழக மாணவர்களும் மூன்றுகோரிக்கைகளை முன்வைத்து இன்று வகுப்புகளை பகிஷ்கரிப்பார்கள்.

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும். இச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்யவேண்டும் அல்லது சாதாரண சட்டத்தின்கீழ் நீதிமன்ற விசாரணைக்குட்படுத்த வேண்டும்" "இலங்கையிலுள்ள சகல பல்கலைக்கழக நிர்வாகத்தை அரசாங்கம் கையேற்பதென்ற யோசனையைக் கைவிடவேண்டும்."

இந்த மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்தே ஒரு நாள் அடையாள பகிஷ்கரிப்பை மாணவர்கள் இன்று மேற்கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இப் பகிஷ்கரிப்பையொட்டி, இன்று பிற்பகல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

பல்கலைக்கழகங்களின் மாணவர் அவைப் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தவுள்ளனர்.

வகுப்புகள் பகிஷ்கரிப்பது குறித்து, சுவரொட்டிகளும், துண்டுப்பிரசுரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. [மா]

புதிய பிரயாண சேவை

உரும்பராய் - ஊரெழுப் பகுதி, உடுவில் மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி மாணவிகளுக்காகப் புதிய வான் VAN சேவையில்ஈடுபட்டுள்ளது.

உங்கள் பிள்ளைகள் நெரிசலின்றி
ஆசனங்களில் அமர்ந்து செல்ல
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

க. குலசேகரம்,
"அமுத சுரபி', உரும்பராய்ச் சந்தி.

6303

# வரி விளம்பரம்

## தேவை

திருநெல்வேலியில் உள்ள கற்பூரத் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள 30 வயதிற்குட்பட்ட பெண்பிள்ளைகள் உடன் தேவை கீழ்க்காணும் விலாசத்திற்கு நேரில் வரவும். த. மகாலிங்கம், நம்பர் 2, பிள்ளையார் ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு (தபாற் பெட்டியடி, திருநெல்வேலி (6289)

யாழ் நகரில் ஆரம்பிக்கப்படவுள்ள நவீன ஹோட்டல் ஒன்றுக்கு வெயிட்டர், பழரசம், ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்கள் தேவை அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். ஐயா. சச்சிதானந்தம் 222/4 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (6285)

யாழ். ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் மருத்துவ மாணவனுக்கு சாப்பாட்டுடன் தங்குவதற்கு ஒரு வீட்டில் இடம் தேவை ஆஸ்பத்திரிக்கு அண்மையில் இருத்தல் வேண்டும். செல்வநாதன், ஆர். எஸ். அச்சகம் யாழ்ப்பாணம். 6281

நன்கு அனுபவம் உள்ள மெசின் மைண்டர் ஒருவர் உடன் தேவை. மேலும் இரவு வேலை செய்ய (Night Shift) இரு மெசின் மைண்டர்கள் உடன் தேவை. ஆர். எஸ். அச்சகம் யாழ்ப்பாணம். [6280]

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலமான ஸ்தாபனத்திற்கு கீழ்க்கண்ட ஊழியர்கள் உடனடியாகத் தேவை. நம்பிக்கையும், திடகாத்திரமும் கொண்ட நடுத்தர வயதுள்ள லொறிச்சாரதி- முன் அனுபவம் விரும்பத்தக்கது. பிணைப் பணம் அவசியம். நற்சாட்சி பத்திரங்களுடன், சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட விண்ணப்பங்களை எதிர்பார்க்கும் ஊதியம் குறித்து விண்ணப்பிக்கவும். குளிர்சாதனப் பெட்டிகள் திருத்துபவர்கள் இதில் அனுபவமுள்ளவர்கள் தாங்கள் எதிர்பார்க்கும் ஊதியத்தைக் குறித்து நற்சாட்சி பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். குளிர்சாதனப் பெட்டிகள், அலுவலக இயந்திரங்கள் பழுதுபார்ப்பதில் அனுபவம் பெற விரும்புபவர்கள்- ஆற்றலுள்ளவர்களுக்கும், வேலைபழகும் காலத்திற்கு ரூபா இரண்டாயிரம் செலுத்த விருப்பமுள்ளவர்களுக்கும் மாத்திரமே முன்னுரிமை வழங்கப்படும். சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட விண்ணப்பங்களை, நற்சாட்சி பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். 6286

## பயிற்சி

றேடியோ. டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங் எலக்றிக்கல் வயறிங், மோட்டார் மெக்கானிசம், Hotel Management, English செய்முறைப் பயிற்சிகளுடன் மீண்டும் ஆரம்பம் 27-02-83 விபரம் நேரில், The School of Computer Studies 52/1, கனகரத்தினம் கட்டிடம் (வீனஸ் றெக்கோடிங் பார் மேல்மாடி) ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 6228

## வாடகைக்கு

நாவலர் வீதி கச்சேரி நல்லூர் வீதி, முன்னைப்பிள் சகல வசதியுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்குண்டு. ஐயா சச்சிதானந்தம் 222/4 கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம். (6306)

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற பருத்தித்துறை கணபதிப்பிள்ளை செல்வராசாவின் மரண சாதன மரணச் சொத்து விடயமாய்:-

1. கணபதிப்பிள்ளை சபாரத்தினம் - சாவகச்சேரி
2. கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு - பருத்தித்துறை மனுதாரர்கள்

மரணசாதன) ) - இல. 1159 நியாயாதிக்கம்)

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்து கடன் இறுக்க வகையற்ற மரணச்சொத்தாக நிருவகிக்கப்படுவதற்காக மேலே உள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுஅதற்கிணங்க அதில் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் ஆள் 1983ம் ஆண்டு பங்குனி மாதம் 4 ஆம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் ஏதேனும் இருப்பின் அதனைக்காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றீர்.

1983 மாசி 18ந் தகதி

நீதிமன்றக்கட்டளைப்படி

கே. செல்வராஜா
பதிவாளர்

என்னுல் தயாரிக்கப்பட்டது
மு. ஈஸ்வரபாதம்
ம. சட்டத்தரணி
(6271)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பிரான்ஸ் வழியாக

இத்தாலி, பெல்ஜியம் விசாவுடன்
பிரான்ஸ், கனடா, திரிப்பொலி
டப்ளின், நோர்வே

ஆகிய நாடுகளுக்கு மிக விரைவில் விமானப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்க!

# "CROSS TRAVEL SERVICE"

2-வது தொடர்மாடிக் கட்டிடம்,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
6265

யாழ்ப்பாணம்
அபிவிருத்திச்சபை

## அறிவித்தல்

1983-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ந் திகதி காலை 10-00 மணிக்கு யாழ். அபிவிருத்திச் சபைப் பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலைப்பகுதி) அவர்களால் கிளிநொச்சித் தொகுதியில் இருக்கும் கரச்சிக் கிராமத்தில் கிராமியப் பாலம் அமைப்பதற்கு, பெருந் தெருக்கள் திணைக்களம், கட்டிடத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் அரசாங்கத்திணைக்களங்களில் ரூபா 100,000,00க்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து சில வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினம் காலை 10-10க்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் ரூபா 100-00 வைப்புப் பணமாகவும் ரூபா 25-00 கிரயமாகவும் யாழ். அபிவிருத்திச் சபைத் தலைமைச் செயலகத்தில் செலுத்துவதன் பேரில் 1983ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ந் திகதி மாலை மூன்று மணிவரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

மேலும் தேவையான விபரங்கள் பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலைப் பகுதி) அவர்களின் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அன்ரன் அல்பிரட்,
பிரதிச் செயலாளர்,
[நிர்வாகம், சட்டம், வேலைப்பகுதி]
யாழ். அபிவிருத்திச்சபை.
உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்களம்,
கண்டிவீதி, யாழ்ப்பாணம்.
21-02-1983. 6287

## குளிர்பான வியாபாரிக்கு ரூ. 1000 அபராதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் ஹோட்டல் வைத்திருக்கும் நபர் ஒருவருக்கு யாழ் நீதவான் 1000 ரூபா அபராதம் விதித்தார்.

2 ரூபா 80 சதம் பெறுமதியான ஒரு போத்தல் குளிர்பானத்தை 70 சதம் கூட்டி அவர் விற்பனை செய்திருந்தார். இந்த மோசடியை விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர் நா. அருளானந்தம் கண்டுபிடித்து அந்த வியாபாரி மீது யாழ் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

இதனைத் தொடர்ந்தே நீதிபதி அந்த வியாபாரிக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

(ஈ)

## நெல்கொள்வனவு

(துணுக்காய்)

துணுக்காய், வவுனிக்குளம், பாண்டியன்குளம் பகுதியில் தற்போது அமோக அறுவடை நடைபெறுவதால் நெற்கொள்வனவு வேலைகளும் துரிதமாக நடைபெற்று வருகிறது.

துணுக்காய் பகுதிபலநோக்கு கூட்டுறவுச் சங்கமும், வவுனிக்குளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் சுமார் 15 தனியார் கொள்வனவு முகவர்களும் போட்டி போட்டு நெல் கொள்வனவு செய்து வருகிறார்கள். விவசாயிகளுக்கு முன்கூட்டியே பசளை, கிருமிநாசினிகளை தனியார் முகவர்கள் கடன் அடிப்படையில் வழங்கி இப்போது நெல்லை கொள்வனவு செய்து வருகிறார்கள். மாங்குளம் மக்கள் வங்கி கடன் வசதிகளையும் துணுக்காய் நெல்சந்தைப்படுத்தும் சபை களஞ்சியப்படுத்தல் வசதிகளையும் உடனுக்குடன் செய்து வருகிறது.

## சேவையாளர் தேவை

1. பெண் சுகாதாரப் பயிற்சியாளர்:

க. பொ. த (சாதாரண தரத்தில் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்தும், 20—25 வயதிற்கிடைப்பட்டவராகவும் பயிற்சி உட்பட இரண்டரை வருடத்திற்குச் சேவையாற்றக்கூடியவருமாக இருக்கவேண்டும் பிறநாட்டு சுகாதார கல்வியாளரினால் 6 மாதப் பயிற்சி வழங்கப்படும்.

2. மருந்தாளர்:

எமது நடமாடும் வைத்திய சேவையில் கடமையாற்ற பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் தேவை.

3. திட்ட உதவியாளர்:

கடற்றொழில்/விவசாயத்தில் அறிவு, அனுபவம் உள்ளவர் தேவை.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ஆங்கிலத்திலான விண்ணப்பத்தைச் சொந்தக் கையெழுத்தில் தயாரித்து 1-3-83ற்கு முன் கீழ் வரும் விலாசத்திற்கு அனுப்பவும்.

முக்கிய குறிப்பு:

சமூக, கிராமிய சேவையில் நாட்டமுடையவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

இலங்கை கிராமிய மீளமைப்பு நிறுவனம்,
70, புங்கன்குளம் றேட்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
(6300)

## JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE VADDUKODDAI
## NEW ADMISSIONS FOR 1983/84

Applications for admission to Technician courses commencing in May 1983 are accepted till 31st March, 1983. Students of either sex under 20+ age passed six subjects at G C.E.O.L. including Maths, Science and English can apply. Courses are conducted in English medium with explanations in Tamil.

Three year Technician Diploma course is offered in following Engineering fields:

| | | Fees per year |
|---|---|---|
| (1) | Electronics | Rs. 1,000/- |
| (2) | Electrical | Rs. 750/- |
| (3) | Mechanical | Rs. 750/- |
| (4) | Air Con. & Refrigeration | Rs. 750/- |
| (5) | Building Construction | Rs. 750/- |
| (6) | Automobile | Rs. 500/- |

One year Craft courses are offered in Welding Technology, Foundry Practice and Machine Shop Practice at Rs. 750/- per year.

Application forms and prospectus at Rs. 5/- available at Office. Closing date 31 3.83. Apply to Director, Jaffna College Technical Institute, Vaddukoddai.

6302 Director.

## நன்றி நவில்கின்றோம்

### அமரர் நாகமணி கந்தையா

(இளைப்பாறிய பிஸ்கால் சேவையாளர்)

தோற்றம்: 17-5-1917 மறைவு: 27-11-1982



எமது குலவிளக்காய்த் திகழ்ந்து இறைவன் திருவடி சேர்ந்த அன்புத் தெய்வத்தின் இறுதிச்சடங்கிற்கு வருகை தந்து தங்கள் அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும், எமது அழைப்பினை ஏற்று அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிற் கலந்துகொண்டு சிறப்பித்து அன்னாரின் ஆத்மசாந்திக்காக ஆசிகள் கூறியவர்களுக்கும், அனுதாபச்செய்தி அனுப்பித் தமது அனுதாபத்தினையும், ஆசிகளையும் தெரிவித்துக்கொண்டவர்களுக்கும், எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வண்ணம்

க. நாகராசா
(ஆசிரியர், யா/கனகரத்தினம் ம/ம/வித்.) அவர்களும்
குடும்பத்தினரும்

36 டற்கசர வீதி,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.
(6301)

## "இந்தி எதிர்ப்பை ஏற்கவில்லை; ஆனாலும்

# தமிழ்நாட்டு மக்களின் தமிழ் உணர்வை மதிக்கிறேன்

### -- பிரதமர் இந்திரா

புதுடில்லி, பெப். 23

"தமிழ்நாடு மாநிலத்தின் இந்திமொழி எதிர்ப்பை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். அதேவேளையில் தமிழ் மக்களின் தமிழ்மொழி உணர்வை மதித்துக் கௌரவிக்கின்றேன்"

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி லோக்சபாவில் அஸாம் மாநில விவகாரங்கள் குறித்துக் கூறுகையில் குறிப்பிட்டார்.

பிரதமர் இந்திராகாந்தி தமிழ்நாட்டின் இந்திமொழி எதிர்ப்புப் பற்றி மேலும் தெரிவித்துள்ளதாவது:

"என்னை சந்திக்கும் தமிழ் மக்களிடமும், நான் சந்திக்கும் தமிழ்மக்களிடமும் 'வணக்கம்' எனத் தனித்தமிழில் கூறிவருகிறேன். இது தமிழ்மக்களின் தாய்மொழியான தமிழ்மொழி உணர்ச்சிக்கு நான் கொடுக்கும் கௌரவமும் பாராட்டுமாகும்.

தமிழ்நாட்டு மாநில அரசும் தமிழ்மக்களும் பாரதத்தின் ஆட்சிமொழியான இந்திக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை, நாட்டின் நல்வாழ்வுக்கு மொழி, மத, இன உணர்வுகளை தீவிரமாக்குவதனையோ, தூண்டிவிடுவதையோ எமது ஆட்சியில் இடமளிக்கமாட்டோம். பாரதமக்கள் ஒருவரை ஒருவர் மதிக்கவும், அவர்களின் தனித்துவங்களைப்பாராட்டவும் முன்வருவதே தேசிய நலனுக்கு ஏற்றதாகும்" (உ)

---

## போக்லண்ட் தீவிலுள்ள

# பிரிட்டிஷ் வீரர்களுக்கு மணப்பெண்கள் தேவை!

லண்டன், பெப் 23

"போக்லண்ட் தீவில் நிலைகொண்டிருக்கும் சுமார் நாலாயிரம் பிரிட்டிஷ் துருப்புகளுக்கு திருமணஞ்செய்து கொள்ளப் பெண்கள் தேவை" என்று பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்

கடந்த ஆண்டில் இடம்பெற்ற யுத்தத்தையடுத்து சுமார் 4000 பிரிட்டிஷ் துருப்புகள் போக்லண்டில் இருந்து வருகின்றன

தொழில்கட்சி அரசில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே போக்லண்டிலுள்ள துருப்புகளுக்கு மிகவும் குறைந்த வசதிகளே செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

போக்லண்டின் மொத்த சனத்தொகை கடந்த ஆண்டில் 1800 ஆகும். இத்தொகையுடன் 81 கடற்படை வீரர்கள் மட்டுமே போருக்கு முன்னர் அங்கிருந்தனர். தற்போது அங்கு சுமார் 4000 துருப்புகள் நிரந்தரமாக அமர்த்தப்பட்டுள்ளனர். (கி)

---

## இஸ்ரேலிய - லெபனான் பேச்சுக்கள்:

# அரபுவட்டாரங்கள் சந்தேகம்

பேரூட் பெப் 23

"லெபனானில் இஸ்ரேல் ஈட்டிய ராணுவ வெற்றியின் பலன்களை இஸ்ரேலிடமிருந்து பறித்து விடும் நோக்கம் அமெரிக்காவுக்கு இல்லை" என்று இஸ்ரேலில் உள்ள அமெரிக்க ஸ்தானிகர் திரு. சாமுவேல் லுவிஸின் விடுத்த அறிக்கை அமெரிக்கா நிலைப்பாட்டை துலாம்பரமாக படம் பிடித்து காட்டுவதாக அரபு வட்டாரங்கள் கருதுகின்றன.

அமெரிக்க ஆதரவுடன் நடைபெறும் இஸ்ரேலிய – லெபனான் பேச்சுவார்த்தைகளில் அமெரிக்க மேற்கொள்ளும் நிலைப்பாட்டுக்கும் இது எடுத்துக்காட்டாகும் என்று தெரிவிக்கும் அரபு வட்டாரங்கள்; அரபு நாடான லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய ஆக்கிரமிப்புக்குக் காரணம் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அடக்குவதற்கே என்று கூறப்பட்டபோதிலும் அதன் உள் நோக்கம் லெபனான்மீது அதன் அரசியல், ராணுவ, பொருளாதார மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதாகும் என்றும் இப்பொழுது நடைபெறும் இஸ்ரேல் – லெபனான் பேச்சுவார்த்தைகளின் போக்கு இதை ஊர்ஜிதம் செய்வதாக உள்ளது என்றும்கூறுகின்றன.

"செயலற்றுப்போன கேம்ப் டேவிட்' உணர்வை உயிர்ப்பித்து அரபு நாடுகளிலிருந்து லெபனானை பிரித்து விட்டால் "லெபனானின் இஸ்ரேல் மயமாக்கம்" பூரணமாகி விடும்.

[7ம் பக்கம் பார்க்க]

---

# பி. எஸ். ராமையாவுக்கு தேசிய அக்கடமி விருது

சென்னை, பெப். 23

இந்தியாவிலுள்ள 22 தனிச்சிறப்புப் பெற்றுள்ள தேசிய மொழிஎழுத்தாளர்களுக்கு இந்திய தேசிய அக்கடமியின் 1982–ம் ஆண்டிற்கான விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்திய தேசிய அக்கடமி ஆண்டு தோறும் கற்பனை இலக்கியத்துறையை ஊக்குவிக்கும் முகமாக இவ்விருதுகளை வழங்கிவருகின்றது. இவ்விருதும் ரூபா 5,000 ரொக்கமும் ஒரு பாராட்டுப் பத்திரமும் கொண்டதாகும்.

சென்னையில் இவ்விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது பாரத தேசிய அக்கடமியின் புதிய தலைவரான, கன்னட, ஆங்கில மொழிகளின் விற்பன்னரும் பேராசிரியருமான ஹோக்கர் இவ்விருதுகளை எழுத்தாளர்களுக்கு வழங்கி கௌரவித்தார்.

'மணிக்கொடிக்காலம்" என்

[7ம் பக்கம் பார்க்க]

---

# தமிழ்நாட்டிலும் வர்த்தக வலயம்

சென்னை, பெப். 23

200 ஏக்கர் பரப்பில் சுதந்திர வர்த்தக வலயத்தை சென்னை விமான நிலையத்தின் அருகில் அமைக்கும் தமிழ்நாடு மாநில அரசின் திட்டத்தை மத்திய அரசு பரிசீலனை செய்கிறது.

இத்தகவலை தமிழ்நாடு மாநில அரசின் தொழில்துறை –தொழிலாளர் நலன் அமைச்சர் திரு திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார். (உ)

---

# பஸ்ஸில் தீ! —

## 25 பேர் கருகிமாண்டனர்!

புதுடில்லி, பெப். 23

மேற்கு வங்காளத்தில் தனியார் பஸ் ஒன்று தீப்பிடித்ததால் 3 பெண்கள் உட்பட 25 பிரயாணிகள் கருகி உயிரிழந்தனர்.

கல்கத்தாவிலிருந்து வந்த இத்தனியார் பஸ்ஸில் ஒருகதவு மட்டுமே உண்டென்றும், 35 பேர் பயணம் செய்ததாகவும் கூறப்படுகிறது. (க)

---

# அஸாமில் இந்திராவுக்கு அறுதிப் பெரும்பான்மை!

புதுடில்லி, பெப். 23

அஸாம் மாநிலத்தில் நடந்த பொதுத்தேர்தலில் மொத்தம் 126 உறுப்பினர் கொண்ட சட்டப்பேரவையில், அறிவிக்கப்பட்ட 81 தொகுதிகளில் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சி 70 இடங்களைப் பெற்று அறுதிப் பெரும்பான்மை பெற்ற கட்சியாகிவிட்டது.

இம் மாநிலத்தின் முன்னை நாள் முதலமைச்சரான இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் தமது தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார்.

அஸாம் மாநில ஆதிக்குடிகளின் வேட்பாளர்; இரு தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளரைத் தோற்கடித்து வெற்றிபெற்றுள்ளனர். சரண்பூர் தேர்தல் தொகுதியில் பதிவுபெற்ற மொத்த வாக்குகளின் தொகை 266 ஆகும். இவ்வாக்குகளை முழுமையாகப் பெற்ற இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் ஏனைய வேட்பாளரை தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளார். மேலுமொரு தொகுதியில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளான 206ல் 76 வாக்குகளைப்பெற்ற வேட்பாளர் சட்டப்பேரவை உறுப்பினராகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேகாலய மாநிலத்தில் நடந்த பொதுத்தேர்தல்முடிவுகள் முழுவதும் வெளியாகியுள்ளன. இம்மாநிலத்தில் 60 உறுப்பினர்களைக் கொண்ட சட்டப்பேரவையில் இந்திரா காங்கிரஸ்கட்சி 25 தொகுதிகளைக் கைப்பற்றி வெற்றி பெற்ற தனிப்பெருங்கட்சியாக விளங்குகின்றது. ஏனைய இரு கட்சிகள் தலா 15 தொகுதிகளிலும், வேறுமொருகட்சி 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. 3 சுயேட்சை வேட்பாளர்களும் வெற்றி பெற்றுள்ளனர், 8 தொகுதிகளில். (உ)

---

## "படித்த தாய்மாரின் 'நாகரிகம்':

# புட்டிப்பால் குழந்தைகளின் நலனைக் கெடுக்கிறது!"

சென்னை, பெப். 23

"உலகசுகாதார நிறுவனம் 'யுனிசெவ்' நிறுவனம் செய்யும் செலவைவிட, ஆண்டு தோறும்; குழந்தைகளுக்குப் புட்டிப்பால் ஊட்டுவதை ஊக்குவிக்க புட்டிப்பால் உற்பத்தி நிறுவனங்கள் சில கூடுதலான நிதியை விளம்பரத்திற்காகச் செலவிடுகின்றன"

இந்தியாவின் சத்துணவுத் திட்டக் கமிஷன் தலைவர் அகஸ்டின் வில்லியட் மேற்கண்டவாறு சென்னையில்வைத்துத் தெரிவித்தார். திரு. அகஸ்டின் வில்லியட் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பேணுவதற்குத்தாய்ப்பாலைவிடச் சிறந்த குழந்தை உணவு எதுவும்இல்லை. ஆனால் படித்த தாய்மார்களிடம் புட்டிப்பால் ஊட்டும்முறை அதிகரித்துவருகிறது. கிராமங்களிலும், வறியவர்களிடம் இன்றும் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஊட்டப்பட்டு வருவது பாராட்டப்படவேண்டியதே.

இந்தியாவில் பம்பாய், டில்லி போன்ற நகரங்களில் படித்த தாய்மார்கள் தமது குழந்தைகளுக்குப் புட்டிப்பால் ஊட்டுவதையே நாகரிகமாகவும், தமது உடல் வனப்பினைப் பேணும் முறையாகவும் கைக்கொண்டுள்ளனர்.

"ஐ. நா.வின் உலக சுகாதார நிறுவனமும், 'யுனி

[7–ம் பக்கம் பார்க்க]

---

# கராச்சியில் இனக்கலவரம்; 15பேர் பலி! 50பேர் கைது!!

காராச்சி, பெப். 23

பாகிஸ்தானிய தலைநகரிலுள்ள ஒரு மசூதியின்மீது உரிமை பாராட்டிய இரு இனத்தவர்களிடையே ஏற்பட்ட இனக்கலவரத்தினால் கடந்த திங்கள் முதல் புதன்வரையிலான இரு நாட்களில் 15 பேர் பலியானார்கள்! 45பேர் படுகாயம் அடைந்தனர். 50க்கும் அதிகமான கலவரக்காரர்கள் கைதாகியுள்ளனர்.

அண்மையில் கராச்சியில் மாணவர்களின் கலவரத்தை அடுத்து ஏற்பட்டுள்ள இந்த இனக்கலவரத்தை அடக்குவதற்கு பாகிஸ்தானிய இராணுவஅரசு தலைநகரில் சுமுகநிலை ஏற்படும்வரை ஊரடங்குச்சட்டத்தை அமுலாக்கியுள்ளது. தலைநகரிலுள்ள பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களை மூடியுள்ளது. இராணுவத் துருப்புக்கள், பொலிஸ்படையினரை தலைநகரின் மேற்குப்புறங்களுக்கு அனுப்பி நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

தலைநகரிலுள்ள மசூதி ஒன்றின்மீது உரிமை பாராட்டிய இருபிரிவினருக்குமிடையே ஒரு பிரிவினர் பொது வேலைநிறுத்த அழைப்பினை விடுத்ததாகவும், அதனைத்தடுக்க மறுபிரிவினர் செயல்பட்டதாகவும் இதனால் இருபிரிவுகளுக்கும் இடையே இனக்கலவரம் ஆரம்பித்ததாகவும். இதில் 5பேர் பலியானார்கள் என்றும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## உகண்டாவில்

# ஆசியர்களது உடமைகள் மீண்டும் கையளிக்கப்படும்!

கம்பாலா, பெப். 23

உகண்டாவில் இடிஅமின் காலத்தில் வெளியேற்றப்பட்ட ஆசிய வியாபாரிகளுக்கு அவர்களது உகண்டாவிலுள்ள உடமைகளை மீளப் பெறச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்பொருட்டு கனடா, லண்டன், இந்தியா ஆகிய நாடுகளிலுள்ள உகண்டா தூதராலயத்தில் விசேட அலுவலகம் ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகங்களில் உகண்டாவில் இடிஅமின் காலத்தில்வெளியேற்றப்பட்ட ஆசிய வியாபாரிகளும் ஏனைய நாட்டவரும் தமது உடமைகளை மீளப்பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரங்களைப் பெறமுடியுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய உகண்டா ஜனாதிபதி டாக்டர் மில்டன் ஒபோட்டோ இந்த அலுவலகங்கள் அடுத்த 90 நாட்கள் வரை திறந்திருக்குமென்று கருத்துவெளியிட்டுள்ளார்.

மணிவாக்கு

நான் கண்டு மகிழ்வதற்கெல்லாம் நானே அதிகாரி. என் உரிமையை மறுக்க எவராலும் முடியாது.

—தோரோ

# நமது நோக்கு

## அவலம் நிறைந்த சூழ்நிலை

வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகைக்கு நிதியமைச்சரின் 'பீ ரீ ரீ.' என்ன செய்யுமென்பது ஆனை வரும் பின்னே; மணிஓசை வரும் முன்னேபோல் தெரிகிறது.

விலைகளின் ஏற்றம் மக்களின் அதிர்ச்சிக்குள்ளாகிறது.

நாட்டில் அதிகரிக்கும் கொடுமைகள் கண்டு பிரமிக்கும் உணர்வு கெட்டு வருகின்றது. 'சுணையற்ற' நிலை பொதுவாக எங்கும் காணப்படுகிறது.

மாறாத வியாதியைத் தாங்கும் ஆற்றலற்ற முறையின் முடிவைக்காத்திருக்கும் 'கர்மிகள்'போல் பொதுநலவாழ்வுமங்கலாய் விடுகிறது.

பண்டைக்கால ரோமாபுரிப் பிரபுக்கள் சிங்கத்துடன் மனிதர்களை மோத விட்டு விளையாட்டுப் பார்ப்பதில் களிப்படைந்தனர். இக்கோர நிகழ்ச்சிகள் கண்ணுக்கினிமையளித்தகம்பீர கட்டிடம் - Coliseum — இன்றும் ரோமாபுரி புராதன மகிமையை நினைவூட்டும் பொருட்டு இடிந்த நிலையிலும் வானளாவி நிற்கின்றது.

அன்றைய ரோமாபுரியின் பிரபுத்துவ ஆட்சி இன்றைய சோஷலிச குடியரசாகிய இலங்கையில் எவ்வாறு உருவாகலாம் என்று அதிசயிக்கும் வகையில் நிலைமை மோசமடைகின்றது.

கடந்த ஆட்சி, அவசரகால நிலைமை தொடர்ந்த கொடுங்கோல் ஆட்சியென்று நீண்டகாலம் பாடம் பண்ணப்படுகிறது.

இன்றைய பாரிய அபிவிருத்தி வேலைகள் பொதுமக்களை எதிர்நோக்கும் பஞ்சத்தை ஒழிக்குமா? வாழ்க்கைச்சுமை அதிகரித்து வருவதால் மக்கள் உணர்ச்சி குன்றியவர்களாகி விடுகின்றனர்.

அற நனைந்தவனுக்கு கூதலுமில்லை குளிருமில்லை. அத்தியாவசியமான பாவனைப் பொருட்கள் விலையேறுகின்றன. அதைப்பற்றிக் கவலைபடையும் சக்தியே குன்றிவிட்டதானால் உயர்ந்த கொள்கைகளைப்பற்றிப்பேச சந்தர்ப்பம் ஏது?

ஒவ்வொருவரும் தன்தன் காரியத்தைப் பார்க்க நேரமில்லாது அவஸ்தைப்படும் வாழ்க்கை நிரந்தரமாகும் போல் தெரிகிறது.

லட்சக்கணக்கான மக்கள் பட்டினி கிடக்க, பணக்கார அதிகார வர்க்கம் இன்றைய பொருளாதார தாக்கத்தால் எள்ளளவும் நலிவடையவில்லை உண்மையில் ஏழை—பணக்காரர் வித்தியாசம் அதிகரித்துக்கொண்டே போகிறது.

தொழில் அதிபர்கள் வருமான வரியிலிருந்து தப்பிக்கொள்கின்றனர். கடத்தல்காரர் பதுக்கல்காரர், கொள்ளை லாபம் அடிக்கும் கறுப்புச் சந்தைக்காரர் இன்றைய தட்டுப்பாட்டுக்கு ஒருவகையில் முக்கிய பொறுப்பு ஏற்க வேண்டியவர்கள்

மெலிவடைந்த ஆங்கில அறிஞர் ஷாவைப் பார்த்து கொழுப்பு மிகுந்த இன்னொரு இலக்கிய மேதை ஜீ. கே. செஸ்ரேற்றன் (G. K. Chesterton) ''என்ன, உங்களைப் பார்த்தவுடன் நாட்டின் பஞ்சம் புலப்படுகின்றது'' என்றாராம். ''ஆம், அதற்கு உம்மைப் போன்றவர்களே காரணமென்பதும் இலகுவில் புலப்படுகின்றது'' என்று பதிலளித்தார் ஷா அவர்கள்.

சோஷலிச குடியரசாகிய இலங்கையின் தலைநகரிலிருக்கும் மாபெரும் ஹோட்டல்களில் தினசரி நடைபெறும் விருந்து வைபவங்கள் எவ்வளவு கோலாகலமாக நடைபெறுகின்றது!

அதில் பங்குபற்றும் மேல்தட்டு வர்க்கம், அரசியல் அதிகாரிகள், அமைச்சர்கள் போன்ற வசதி படைத்த பெரியவர்கள் ஒருநேர உணவுக்கு செலவழிக்கும் தொகை ஒரு சாதாரண மனிதனுக்கு ஒரு மாதத்துக்கே போதுமானது.

சட்டத்தை மீறிப் பணந்தேடும் சமூகம் செழிப்படையும் போது நீதிமன்றங்களில் குற்றவாளியாகக் காணப்பட்டு ஜெயிலுக்குப் போகிறவர் யார்? என்ற கேள்வி எழுவது பொருத்தமாகும்.

பிரபல கடத்தல்காரரும் அரசியல் பிரமுகர்களும் ஒரே வைபவத்தில் விருந்தினராகக் காணப்படுவது சர்வசாதரணமாய் விட்டது. இதுபோன்ற சூழ்நிலையில் பொதுமக்கள் நீதியிலும் பாரபட்சமற்ற பங்கீட்டிலும் நம்பிக்கை கொள்வது எங்ஙனம்?

நாட்டின் ஜனத்தொகையில் பெரும்பான்மையினர் வாழ்க்கை முறை மிகமோசமாக மாறுதலடைகிறது.

சம்பள உயர்வும், உற்பத்தித்திட்டங்களும் இதற்கு ஈடுகொடுக்க முடியாத வகையில் வெறும் பிரசாரங்களால் பயன் என்ன?

பட்டினி, வேலையின்மை, வியாதி, பாரபட்சம் போன்ற கொடுமைகள், அடக்குமுறை சட்டங்களால் நிவர்த்தியடையா.

நாம் உண்மை நிலையைப் படம்பிடிக்கும்போதும் மகா நாட்டின் பொது நலனுக்கு குந்தகமான எந்த இயக்கத்தையும் ஆதரிப்பதில்லை.

தேசிய ரீதியில் மக்கள் குறை நிறைகளை அறிந்த பிரதி நிதிகள் ஆக்கபூர்வமான திட்டங்களுக்கு தம்மை அர்ப்பணிப்பதும் ஊழலை, விரயத்தைவிரட்டுவதும் பொதுமக்கள் சுய உதவியுடன் தங்கள் ஊதியத்துக்கு உழைக்க வழிகாட்டும் பொறுப்பு அவர்கள் கதவில் அவசரமாய்த் தட்டுகின்றது.

இலங்கை தமிழ் ஆசிரியர்சங்கம் நடவடிக்கை

# பயிற்சிக் கல்லூரிக்கு விடுமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மலையகத்திலுள்ளசிறியபாடசாலைகளிலிருந்து ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களைப் பயிற்சிக்குவிடாது தடுத்து வைக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி அவர்களைப் பயிற்சிக் கல்லூரிக்கு விடுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. வணசிங்காவும், செயலாளர் திரு. த. மகாசிவமும் கல்வி அமைச்சுக்குச் சுட்டிக்காட்டி நடவடிக்கை எடுத்தனர். அவர்களின் கடும் நடவடிக்கைக்குப் பலன் கிடைத்துள்ளது.

கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. எம். பி பி. சீ. சில்வா, நுவரெலியா, பண்டாரவளை, இரத்தினபுரி, கேகாலைஆகியபகுதிகளிலுள்ள கல்விப்பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில், பயிற்சிக்கு இந்த ஆசிரியர்களை அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

அக்கடிதம் வருமாறு!

''இ. த. ஆ. சங்கத் தலைவரும், செயலாளரும் என்னைச் சந்தித்து உங்கள் பிரதேசத்தில் உள்ள சில ஆசிரியர்கள் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி பெறுவதற்கு இதுவரை விடப்படவில்லை என எனக்குக் கூறியுள்ளனர். இப்படியான ஆசிரியர்கள் விசேடமாகசிறிய பாடசாலைகளில் சேவை செய்கின்றவர்களெனவும் அவர்கள் கூறியுள்ளனர். அண்மையில் உங்கள் மாவட்டத்தில் போதுமான அளவு ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளமையில் பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களை பயிற்சி பெறுவதற்கு அனுப்புவது மிக முக்கிய கடமையாகும். ஏதாவது ஒரு காரணத்தின் மீது தெரிவு செய்தோரை பயிற்சி அனுப்ப முடியாத பட்சத்தில், விசேடமாக ஆசிரியர்களுக்கு பொருளாதாரக் குறைபாடுகள் ஏற்படுமாகையால், தற்போது உங்கள் மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களை பயிற்சிக்காக விடுவிக்க முடியாமல் இருந்தால் உங்கள் மாவட்டத்திலே உள்ள ஆசிரிய இடமாற்றத்தைச் செயற்படுத்தி உடனடியாக இவ்வாசிரியர்களை பயிற்சிக்காக விடுவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.''

தவக்கால நற்சிந்தனை



### எங்களைமன்னியும்

யோனஸ் நினிவே மக்களுக்கு அறிகுறியாய் இருந்தார். யோனஸ் நினிவே மக்களுக்கு அவர்களின் பாவ வாழ்க்கையை உணர்த்தின போது அவர்கள் மனம் மாறினார்கள், தவம் செய்தார்கள் ஆனால் நீர் அவர்களை மன்னித்தீர். இன்று நாங்களும் பாவ நிலையில் இருக்கிறோம். உமது கட்டளைகளும், வார்த்தைகளும் எம்மை நோக்கி வரும்போது அவற்றை தவிர்த்துவிட்டு உமது அருளையும், வல்லமையையும் வேறெங்கோ தேடுகிறோம். எம் அன்றுட வாழ்வில் நடக்கும் ஒவ்வோர் சம்பவத்திலும், சந்திக்கும் ஒவ்வோர் மனிதரிலும் உமது அன்பையும், அறிவுறுத்துதலையும் புரிந்து ஏற்றுக் கொள்ள வரம் தாரும்.

அருட்செல்வன் ம. ரூபன்

# யாழ். மாநகரமும் ஆட்சிமன்றமும்

1979 இல் யாழ். மாநகராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்று தமிழர் விடுதலைக்கூட்டணியினர் வெற்றி பெற்ற போது கூட்டணியின் ஆதரவாளர்கள் பலர் மகிழ்ச்சியடைந்தனர். காலஞ்சென்ற முன்னைநாள் மேயர் துரையப்பாவின் மறைவுக்குப் பின் தேங்கிக் கிடந்த பல வேலைகள் நிறைவேற்றப்படும் என்றும் யாழ். மாநகரத்துக்கு விமோசனம் கிடைத்துள்ளது என்றும் கனவு கண்டனர். ஆனால் கடந்த 5 ஆண்டுகளில் யாழ். மாநகரம் கண்டுள்ள முன்னேற்றம் எவையென்றால் எவையுமே இல்லையென்றே கூறவேண்டும்.

**மக்கள் கருத்து**

மன்றம் நடைபெறத் தொடங்கிய காலம் முதல் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்க்காங்கிரஸ் மோதல்களே பெரும் பாலும் கூட்டங்களில் நடைபெற்று வந்தன. இதற்கிடையில் கனவான் ஒப்பந்தங்கள் பல இந்த ஒப்பந்தம் மேயர் விடயத்தில் பலிக்கவில்லை. இவையெல்லாம் மக்கள் அறிந்தவை. ஏதோ பொறுத்திருந்து பார்ப்போம். எல்லாம் நல்லபடியாக நடைபெறும் என்று மக்கள் நினைத்தார்கள். 1974 ம் ஆண்டு துரையப்பாவின் மறைவுக்குப் பின் யாழ். நகரதெருக்களெல்லாம் திருத்தப்படாது குண்டும் குழியுமாகக் கிடந்தன. தமிழர் விடுதலைக்கூட்டணியினர் பதவியேற்ற ஒரு வருடத்தின் பின் சில தெருக்களுக்குத் திருத்தங்கள் செய்யப்பட்டன. அதன் பின் மீண்டும் பழைய பல்லவி கடந்த 2 வருடங்களுக்கு மேலாக யாழ். நகர தெருக்களில் பெரும்பாலானவை வாகனப் போக்குவரத்துக்கும் பாதசாரிகளுக்கும் பயங்கர பொறிக் கிடங்குகளாக மீண்டும் குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன.

மின் இணைப்பைப்பெறுத்தவரை வீடுகளுக்கு மின் இணைப்புக்கோரி பேயரிடம் சென்றால் புதியஇணைப்புக்கள் எதுவும் பொருத்தப்படமாட்டாது என்ற இலங்கை மின்சார சபையின் பணிப்புரை காட்டப்படுகிறது மின்சாரக் கட்டணம் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் நிலுவைகள் கட்டப் பிந்தும் காரணத்தைக் காட்டி வசதி குறைந்தோரின் வீடுகள் பலவற்றிற்கு மின் இணைப்புகள் துண்டிக்கப்படுகின்றன.

தெருக்களில் தேங்கிக் கிடக்கும் குப்பை கூழங்கள் நாள்தோறும் அகற்றப்பட வேண்டும் என்பது நியதியாகும். எமது பகுதியைப் பொறுத்தவரை தத்தமது வீடுகளுக்கு முன் தெரு ஓரங்களிலுள்ள குப்பைகளை மக்களே கூட்டி ஒதுக்கிக் குவித்து வைக்கின்றார்கள். இது மாநகராட்சி மன்ற ஊழியர்களின் வேலைகளைச்சுலபமாக்கின்றது. ஆனால் அப்படி மக்களால் கூட்டி ஒதுக்கி வைக்கப்படும் குப்பைகள் கூட ஒழுங்காக அகற்றப்படுவதில்லை. வாரத்தில் ஒருமுறை அல்லது இருமுறைகளே அகற்றப்படுகின்றன. அதுவரைக்கும் அவை தேங்கிக்கிடந்து நாற்றமெடுக்கின்றன. யாழ். மாநகராட்சி மன்ற சுகாதாரப் பகுதியினர் இதற்கு பதிலளிப்பார்களா?

எமது குருநகர்ப் பகுதி கடலுக்குச் சமீபமாக மாட்டெலும்புகளும் குடல்களும்

(8ம் பக்கம் பார்க்க)

# சிறந்த பிரஜைகளை உருவாக்கும் சாரணீயம்

ஏ. எஸ். சுப்பிரமணியம்
(வளர்ந்தோர்கல்விஅதிகாரி)

சாரணீயம் ஒரு கஷ்டமான விஞ்ஞானமல்ல. ஆனால் அது எப்பொழுதும் களிப்பூட்டக் கூடிய விளையாட்டாகும். அதே வேளையில் அறிவூட்டி சாரணீய இலட்சியங்களைப் பரப்புபவனுக்கும் இலட்சியங்களை ஏற்பவனுக்கும் மிகக்கூடிய பயனையளிக்கின்றது. ஆண்பாலாருக்கும் பெண்பாலாருக்கும் பல விளையாட்டுக்கள் மூலம் கட்டுப்பாடான சேவை மனப்பான்மையுள்ள, கடமையுணர்ச்சியுள்ள மனிதாபிமானமுள்ள தேசப் பற்றுள்ள பிரஜையாக நாட்டின் வளர்ச்சிக்கு பூரணஒத்துழைப்புடன் உதவக்கூடிய முறையில் வழிவகுக்கின்றது. நாட்டில் பூரண வளர்ச்சி மக்களிற் தங்கியுள்ளது. நாட்டின் மூலவளங்களை ஆராய்ந்து அவற்றை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் முன்னேற்றத்திற்கு மக்கள் பரந்தநோக்குடன் தேசஒற்றுமை சகோதரத்துவம் சமாதானம் ஆகியவற்றை மனதிற் பதித்து மிகக் களிப்புடன் ஊக்கமான மனத்துடன் செயலாற்றவும் மற்றவர்களுக்கோர் எடுத்துக் காட்டாகவும் பணியாற்ற ஒழுங்கான பயிற்சித்திட்டத்தை வகுத்தபெருமை 1857ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ம் திகதி லண்டன் மாநகரிற் பிறந்த பேடன் பவல் அவர்களுக்குரியதாகும். அவருடைய இலட்சியக் கொள்கைகள் 150 நாடுகளிலுள்ள 1.2 கோடி சாரண அங்கத்தவர்களின் மனதில் ஊறி, இன்று அவருடைய பிறந்ததினத்தை கொண்டாடுகின்றனர் ஏழுவயதுக்கு மேற்பட்ட சிறுவன் ஆடல், பாடல், விளையாட்டுக்கள் மூலம் விஞ்

[5ம் பக்கம் பார்க்க]

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



யாழ். நாவலர் வீதி கொள்ளை:

# சந்தேகநபர்கள் மூவரும் அடையாளம் காணப்பட்டனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவலர் வீதியிலுள்ள மிருதங்கம் தயாரிப்பாளர் கோவிந்தபிள்ளை வீட்டில் நடைபெற்ற கொள்ளை சம்பந்தமாக யாழ் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் யாழ் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்ட போது, அடையாளம் காணப்பட்டனர்.

சந்தேகநபர்களான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செ. செகதீஸ்வரன், வி. இராசகாந்தன், ந. கிருஷ்ணமூர்த்தி ஆகிய மூவருமே அடையாளம் காணப்பட்டவர்களாவர்.

மூவரும் யாழ். நீதவான் வி. ஜெகசோதி முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்ட போது அவர்களை இருவாரங்களுக்கு றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

யாழ் பதில்நீதவான் எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் மேலதிகநீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

நீதிமன்ற பொலிஸ் சார்ஜன்ட் எஸ். மாணிக்கவாசகர் அடையாள அணிவகுப்புக்கான ஏற்பாடுகளை செய்தார்.

கோவிந்தபிள்ளை, திருமதி லக்சுமி கோவிந்தபிள்ளை மகன் விஜயகுமார் ஆகிய மூவரும் சந்தேகநபர்கள் மூவரையும் அடையாளம் காட்டினர்.

கொள்ளை அடிக்கப்பட்ட கோவிந்தபிள்ளை வீட்டின் முன்னால் உள்ள காராஜ் உரிமையாளர் தனபாலசிங்கம் முதலாவது சந்தேகநபரை அடையாளம் காட்டினார்.

கடந்த ஜனவரி மாதம் 17-ம் திகதி இரவு 7-15 மணியளவில் நாவலர் வீதியிலுள்ள கோவிந்தபிள்ளை என்பவர் வீட்டில் பயங்கர ஆயுதங்கள் முன்னிலையில் 31,500 ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளை அடிக்கப்பட்டது தெரிந்ததே. (மா)

## முகாமில் பார்வையிட அனுமதிமறுப்பு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு குருநகர் முகாம்களில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களை பார்ப்பதற்குச் சென்ற பெற்றோர், உறவினர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருநகர் இராணுவமுகாமில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் யாழ் பல்கலைக்கழக மாணவர் ராஜாஜியை அவரின் சகோதரி பார்ப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாம்.

இதுசம்பந்தமாக யாழ் அரசாங்க அதிபரிடம் சிபார்சுக் கடிதம் பெற்றுச் சென்ற ராஜாஜியின் சகோதரி, பிரிகேடியரைச் சந்தித்தபோது அவர் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவில்லாமல் விட முடியாது என்று மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது. (மா)

மாதக் கடைசிவார விற்பனை!

5% கழிவு

ஆர்பிகோ

உற்பத்திப் பொருட்களான

★ உருக்கு தளபாடங்கள்
★ மெத்தைகள்
★ ரபர் சீற்றுகள்
★ விளையாட்டுப் பொருட்கள்

முதலியன

15% கழிவு நீடித்துழைக்கும் துணி உறைகள் கொண்ட சகல

லேட்டெக்ஸ்ஃபோம்

மெத்தைகள்

வெகு விரைவில்

கே. ஜி. பிளாஸ்ரிக்

உற்பத்திப் பொருட்கள்
விற்பனைக்கு வருகின்றன!

☆ பிளாஸ்ரிக் பேஷின்கள் ☆ வாளிகள்
☆ போத்தல் வகைகள் இன்னும் பல, பல....

டிரான்ஸ்லங்கா
மாக்கெட்டிங் லிமிட்.

இல. 1 புதிய நவீனசந்தை (முதலாவது மாடி),
யாழ்ப்பாணம். போன்: 23027

## சிறந்த பண்பாளர் வேற்பிள்ளை

கடந்த மாதம் தைப்பொங்கல் தினத்தில் இறைவனடி சேர்ந்த திரு எ. வி. வேற்பிள்ளை, நண்பர்கள் மனதில் மட்டுமன்றி அவரை அறிந்தவர் மனதிலும், நிலையான இடத்தைப்பெற்று விளங்குகிறார்! திரு. வேற்பிள்ளையின் 75 வருடகால வாழ்க்கையில் அவரது நட்புறவையும், விருந்தோம்பல் பண்பினையும், அனுபவித்த நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் அவரது மறைவு வேதனை தரும் தருவதொன்று.

அவரது நட்பை நாடி வந்தவர்கள் அனைவரும், அவரது நேர்மையும், கண்ணியமும் மிக்க வாழ்க்கையையும், சமூகசேவைகளில் அவருக்கிருந்த நாட்டத்தையும் விபரித்துக் கூறத்தவறுவதில்லை 1962ம் ஆண்டு இரத்தினபுரி அரசாங்க செயலகத்தில் 'ஓ எ' யாக இருந்து அவர் ஓய்வு பெற்றார் தமது ஓய்வு கால வாழ்க்கையை சமூகசேவைகளிலேயே பெருமளவு அவர் செலவிட்டிருந்தார்.

திரு வேற்பிள்ளை இளம் பராயத்தில் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் உயர்கல்வி பெற்றார் பின்னர் இலங்கை திரும்பி இரண்டாந்தர லிகிதர்சேவையில் சேர்ந்தார். இவர் தமது சேவைக்காலங்களில் நீதிஅமைச்சிலேயே அதிக காலம் சேவையாற்றினார். பல நீதிமன்றங்களில் செயலாளராகக் கடமைபுரிந்த திரு, திரு வேற்பிள்ளை நீதிபதிகள் பலரது நன்மதிப்பைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரசியலில் அமரர் ஜி. ஜி பொன்னம்பலத்தின் அபிமானியாக இவர் இருந்தார். பின்னர் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மீதும் பெருமதிப்பு வைத்து தமிழர் ஐக்கிய கூட்டணியை அமைப்பதில் தீவிர சிரத்தை கொண்டிருந்தார். சகலரையும் கவரக்கூடிய சிறந்த நண்பராக விளங்கிய திரு. வேற்பிள்ளை நெடுங்காலம் தளர்வுற்ற அவரது உடலுடனிருந்து சிரமப்படாது இறைவனடி சேர்ந்ததைமட்டும், அவரது மறைவு குறித்து எம்மால் தேறுதலாகக் கொள்ள முடிகின்றது.

கே.என். சுப்பிரமணியம்

## ரூப வாஹினியில் இன்று

6-00- இன்றைய நிகழ்ச்சிகள்
6-01- குழந்தைகளுக்கான சிங்கள) இசை நிகழ்ச்சி.
6-15- கார்டடூன் திரைப்படம்
6-30- இளைஞர்கள் நடவடிக்கை சம்பந்தமான விசேட நிகழ்ச்சி
7-00- செய்தி மஞ்சரி (தமிழ்
7-14- நாளைய நிகழ்ச்சி.
7-15- சிறப்பு நிகழ்ச்சி.
7-45- நட்பு விவகாரங்கள் பற்றிய அறிக்கை.
8-15- செய்தி மஞ்சரி [சிங்களம்].
8-29- நாளைய நிகழ்ச்சிகள்.
8-30- சிங்களத் திரைப்படம்
9-30. செய்தி மஞ்சரி (ஆங்கிலம்)
9-45- சிங்களத் திரைப் படம் [தொடர்ச்சி)
11-30- இன்றைய ஒளி பரப்பு முடிவு.

## சிறந்த...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

ஞான ரீதியான கொள்கைகளை அறிந்து செயற்படுத்தி இறக்கும்வரைக்கும் சாரணனாக, தனக்கும் சமூகத்தினருக்கும் சேவையாற்றக் கூடிய முறையில் விளங்குகின்றான்.

சாரணத்துறையில் பயிற்சி பெற்ற ஒருவன், கண்ணியம், கட்டுப்பாடு, கடமையுணர்ச்சி, சேவை மனப்பான்மை, எளிமை, பரந்தநோக்கு, சமயப்பற்று, தன்னடக்கம், பண்பாடு, சீரியவொழுக்கம், தேசாபிமானம் ஆகியவற்றை செய்முறையிற் காட்டி, உடல், உள, ஆத்மீக வளர்ச்சிக்கு வித்திட்டு தொடர்ந்து பொது மக்களுக்கு வழிகாட்டியாக வமைய, திட்டமிட்டவரான உலக மக்களால் போற்றப்பட்டுவரும் உத்தமன், பெரும்பிரபு பேடன் பவல் அவர்கள் இவ்வுலகை நீத்து விண்ணுலகெய்தி 42 வருடங்களாகின்றன. ஆனால் அவருடைய கொள்கைகளை அரசியல்வாதிகள், விஞ்ஞானமேதைகள், பொறியியலாளர்கள், சட்ட நிபுணர்கள் எல்லோரும் ஏகமனதாய் ஏற்று சமுதாயமுன்னேற்றத்துக்கு உழைத்துவருகின்றனர்.

# அரசபதவி வெற்றிடங்கள்

## விலைமதிப்பீடு பரிசோதகர்

விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தில் இடைநிலை தொழில் நுட்பசேவையின் 3-ம் தர விலைமதிப்பீட்டு பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் 3 பாடங்களில் திறமைச் சித்தியுட்பட 6 பாடங்களில் சித்தியும் அதனுடன் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் விலைமதிப்பீட்டியல் டிப்ளோமா பெற்றிருத்தல் அல்லது பல்கலைக் கழகத்தில் தோட்ட முகாமைத்துவம், விலைமதிப்பீட்டியல் என்பனவற்றில் பட்டம் பெற்றிருத்தல் அல்லது பட்டய நில அளவையாளர் முதலாண்டுப் பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும் வயதெல்லை 18 தொடக்கம் 40 வரை விண்ணப்பிக்க கடைசித் திகதி மார்ச் 11-ம் திகதி விபரங்களுக்கு பெப்ரவரி 3-ம் திகதி வர்த்தமானியை பார்க்கவும்.

## நூல்நிலையப் பொறுப்பாளர்

கமத்தொழில் திணைக்களத்தில் 3-ம் தர நூல் நிலையப் பொறுப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி இலங்கை நூல்நிலைய சங்கத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் அல்லது கனிஷ்ட பல்கலைக் கழகத்தில் நூலகவியல் அல்லது அதற்குச் சமமான பட்டம் பெற்றிருக்க வேண்டும். கமத்தொழில் விஞ்ஞானத்தில் இருக்கும் தகமைகள் மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்படும். வயதெல்லை 22 தொடக்கம் 40 வரை. விண்ணப்பிக்க கடைசித் திகதி மார்ச் 15-ம் திகதி. விபரங்களுக்கு பெப்ரவரி 11-ம் திகதி வர்த்தமானியை பார்க்கவும்.

## மாணவி பிரபாலினி விபத்துமரணம்:

# லொறிச்சாரதியை கைதுசெய்யுமாறு உத்தரவு!

[யாழ்ப்பாணம்]

பாலசுப்பிரமணியம் பிரபாலினி என்ற பாடசாலை மாணவியை சிலதினங்களுக்குமுன் மோதிக்கொன்ற லொறிவண்டியின் சாரதி தொடர்ந்தும் தலைமறைவாக இருந்துவருகின்றார். அவரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளைத் தீவிரமாக்கும்படி யாழ்ப்பாணம் பதில் நீதவான் எஸ் அமிர்தலிங்கம் பொலிசாரைப்பணித்துள்ளார்.

மாணவி பிரபாலினியின் மரணவிசாரணையை மேற்கொண்ட பதில்நீதவான் எஸ். அமிர்தலிங்கம் விபத்தினால் தலையில் ஏற்பட்ட பலத்த காயங்களே பிரபாலினியின் மரணத்துக்குக் காரணம்என்று தீர்ப்பளித்தார்.

விசாரணைகளின் போது விபத்து நடந்ததை நேரில் கண்ட சிலர் சாட்சியமளித்தனர். அவர்கள் கொடுத்த தகவல்களில் 26ஸ்ரீ3812 என்ற இலக்கமுடைய அந்த லொறி கொட்டடியிலிருந்து யாழ். ஆஸ்பத்திரி வீதிவழியே வந்து கஸ்தூரியார் வீதியை நோக்கித் திரும்பியபோதே பிரபாலினியை மோதியதென்றும் லொறியின் இடதுகரை 'மட்கார்ட்' பகுதியே முதலில் மோதியதென்றும், பின்னர், பின்சக்கரம் அவரின் தலைப் பகுதியைத் தாக்கியதென்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பிரபாலினி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டவேளை வழியில் காலமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [கி]

## அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன

(மாவிட்டபுரம்)

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் இயங்கும் பாவனையாளர் சங்கங்களின் பிரதேசசபைகளின் சென்ற ஆண்டு நடவடிக்கைகள் பற்றி அறிக்கைகள் கோரப்பட்டுள்ளது.

## குடும்பத்தில் அக்கறையின்றி

# குடியே கதியென இருந்தவர் வாழ்வை முடித்தார்!

(மாவிட்டபுரம்)

குடும்பத்தில் அக்கறையின்றி மது அருந்துவதிலேயே ஈடுபட்ட குடும்பஸ்தர் ஒருவர் குடும்பத்தில் நிம்மதி குலைந்ததால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டார்.

பிராம்பத்தையைச் சேர்ந்த தெட்சணாமூர்த்தி இராஜரத்தினம் (35 வயது) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்தினர்.

காலமானவரின் மனைவி சிவக்கொழுந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

காலமானவரை 12 வருடங்களுக்கு முன் தாம் திருமணம் செய்ததாகவும் 9 பிள்ளைகள் உண்டென்றும் காலமானவர் குடும்பத்தை கவனிப்பதில்லையென்றும் வீட்டில் பணம் தராமல் கிடைக்கும் பணத்தை மது அருந்துவதிலேயே செலவளித்து வந்ததாகவும் இதனால் குடும்பத்தில் சச்சரவு ஏற்பட்டு வந்ததாகவும் அதனால் மனமுடைந்திருந்ததாகவும் கூறினார்.

விசாரணை முடிவில் தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது.

காங்கேசன்துறை பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் க. சண்முகராஜா விசாரணைக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## ஞானசாரிய கல்லூரி பொன்விழா

(கரவெட்டி)

கட்டைவேலி ஞானசாரிய கல்லூரி பொன்விழா 1985ம் ஆண்டு பங்குனி மாதம் நடைபெறவிருக்கின்றது.

இதற்கான முயற்சிகளைச் செய்வதற்கான கூட்டம் சமீபத்தில் கட்டைவேலி ஞானவைரவர் கோவில் முன்றலில் நடைபெற்றது.

இக்கல்லூரியின் பழைய மாணவர்களான வடபகுதி முன்னாள் வடமாநிலக்கல்வி யதிகாரி க. சிவநாதன் உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. த இராசலிங்கம், அதிபர் திரு. வீ. கே. நடராசா, திரு வி. இராசையா உதவி அரசாங்க அதிபர் திருமதி பத்தினிப்பிள்ளை வடபகுதி கல்வித்திணைக்கள மேற்பார்வையாளர் திரு. சி. க. வெற்றிவேலு, இளைப்பாறிய முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு த. கந்தசாமி, திரு. ம. கதிரவேலு. திரு. வ. இராமு ஆகியோர் பொன்விழாச் செயற்பாடுகள் குறித்து திட்டமிட்டனர்.

இக்கல்லூரி 1935ல் ஆரம்பிக்கப்பட்டது. அந்நாளில் மகாதேவா சுவாமிகளும் சைவப் பெரியார் க. சிவபாதசுந்தரமும் கால்கோள் செய்து ஆரம்பித்ததை குறிப்பிடத்தக்கது. (ப)

## குடிநீர் கிணறுகள் அமைக்கப்படும்

[மன்னார்]

மன்னார் மாவட்டத்திலுள்ள அகதிகள் குடியேற்றக் கிராமங்களில் காந்தீய இயக்கத்தினால் குடிநீர்க்கிணறுகள் அமைக்கப்படும்.

இத்திட்டத்திற்கென 50 ஆயிரம் ரூபா செலவிடப்படும், வட்டிபிததான் மடு. ஆலங்குளம், தம்பனை ஆகிய கிராமங்களிலேயே குடிநீர்க்கிணறுகள் அமைக்கப்படும்.

## பதட்டம் தணிகிறது

(புலோலி)

பருத்தித்துறைப் பகுதியில் கடந்த சில தினங்களாக நிலவிய பதட்டநிலை தற்போது தணிந்து வழமைக்கு வருகின்றது.

நேற்று கடைகள் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றது.


நகரசபைத் தலைவர் திரு. எம். வேலும்மயிலும் பதட்டநிலை நிலவியதையடுத்து நகரப் பகுதியைப் பார்வையிட்டார் அத்துடன் பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நகரை வழமைக்குத் திருப்பும் நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டுவருகிறார். (கி)


CENTRIC Sinha Robin

# சென்ட்றிக் விலை அதிகம் தான் - ஆனல் ஒரு போகம் பயிர் செய்தே மிகுதி விலையை மீட்டு விடலாம்.

'சென்ட்றிக் விவசாய நீரிறைக்கும் பம்ப் மட்டுமே ரொபின் அல்லது சிங்க இயந்திரங்களுடன் பிணைக்கப் பட்டு இயங்கும் பம்ப். எரிபொருள் சேமிக்கவும் நீடித்துழைக்கவும் என்றே உருவாக்கப்பட்டது அது. எனவே அதிக விலை கொடுத்து வாங்கினலும் காலக்கிரமத்தில் மிகவும் அதிக சிக்கனத்தை அது தருகிறது.

தன்னியக்க முறையில் அது மண்ணெண்ணெயில் மாறி இயங்கத் தொடங்குவதால் எரிபொருள் வீணவதில்லை. இயந்திரத்தை மறுபடி இயக்கத் தொடங்குவதும் துரிதம்; சுலபம். 4.5 லீட்டர் (ஒரு கலன்) மண்ணெண்ணெயில் சென்ட்றிக் ஜூனியர் 5 மணி 15 நிமிட நேரமும் சென்ட்றிக் சீனியர் 3 மணி 45 நிமிட நேரமும் இயங்கும்.




Mel Ads 1481

சென்ட்றிக் பம்ப் முற்றிலும் தருகிற பல்வேறு சிறப்புப் பயன்கள்.

- எரிபொருளில் மண்டி கலவாமல் பேணும் உள்ளமைந்த பிளாஸ்திக் வடிகட்டி. துடைக்க அழுக்குத் துண்டு துணி தேவையில்லை.
- எரிபொருட் பாதையில் அழுக்கை அகற்ற வசதியாக, அழுக்கைத் தடுத்துக் காட்டிக் கொடுக்கும் கண்ணாடிக் குமிழ் வடிகட்டி. எரிபொருட் குழாயில் அடைசல் கிடையாது.
- அதிர்வைத் தாங்கும் வசைவுள்ள, 5 வருட உத்தரவாதம் கொண்ட எரிபொருட் குழாய்கள். குழாய்கள் வெடிப்புறும் அபாயமில்லை.
- எண்ணெயிட்டுப் பராமரிக்கத் தேவையற்ற பெரிய விட்டம் கொண்ட காற்றுச் சுத்திகர வடிகட்டி இணைப்பு.
- தன்னியக்க முறையில் பெட்ரோலிலிருந்து மண்ணெண்ணெயில் மாறி இயங்கும் எரிபொருட் சிக்கனத் தனித்துவ அமைப்பு.
- இலகுவாக இயக்கக்கூடிய வேகக் கட்டுப்பாட்டு விசை.

சென்ட்றிக் விவசாய நீரிறைக்கும் பம்ப் வாங்கச் செலவு அதிகம்; இயக்கச் செலவோ மிகக் குறைவு. போதியளவு மாற்றுறுப்புகள். திறமையான பணியாட்கள் வழங்கும் நம்பகமான விற்பனைப்-பின்-சேவை.

விலைகள்: ரூ. 4,380/- தொடக்கம்.

J ஜினசேன லிமிட்டெட் உற்பத்தி

வட மாகாணத்தில் விற்பனையும் சேவையும் வழங்கும் எங்கள் விநியோகஸ்தர்கள்: நியூடோன் எலக்ட்ரிக்கல்ஸ், யாழ்ப்பாணம்.
மேலும் கிடைக்குமிடங்கள்: துர்கா ஒட்டோ ஹார்ட்வெயர், யாழ்ப்பாணம். ஒட்டோ ஏஜன்சீஸ், வவுனியா.
மற்றும், வட மாகாணம் எங்கும் உப வியாபாரிகள்.

கடைசி சிலதினங்கள்
ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்

வெலிங்டன் (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி. ஞாயிறு 2-30
சிவாஜி - விஜயா
ராமன் எத்தனை ராமனடி

மனோகரா தினசரி
(யாழ். நகர்) 10-30, 2-15 6-00, 9-45.
என். டி. ராமராவ், கே மாலதி, எஸ்.வி. ரங்கராவ், ரேலங்கி
பாதாள பைரவி

கடைசி சில தினங்கள்
வின்ஸர் (யாழ். நகர்)
வசந்த மாளிகை
(புதிய பிரதி)

றீகல் (யாழ். நகர்)
கடைசிவாரம்
எங்க வீட்டுப் பிள்ளை


# "வடபிராந்திய போக்குவரத்துச்சபைக்கு கிடைத்துள்ள பெருமை"

## புதியசமாதான நீதவானுக்குபாராட்டு

(யாழ்ப்பாணம்)

"சமாதான நீதிபதி பட்டம் இலங்கை போக்கு வரத்துச் சேவையில் கடமையாற்றுபவர்களில் வடபிராந்திய போக்குவரத்துச் சேவையில் கடமையாற்றும் திரு வ சரவணமுத்துக்கே முதன் முதலாகக் கிடைத்துள்ளது. இது அவருக்கு மாத்திரமல்ல, வடபிராந்திய போக்குவரத்து சபையில் கடமையாற்றும் அனைவருக்கும் இது ஒரு பெருமையாகும்" என்று சபைத் தலைவர் திரு சி. கனகரத்தினம் குறிப்பிட்டார்.

வடபிராந்திய போக்குவரத்துச்சபை சாரதியும் நாவற்குழி கிழக்கு வாசியுமான திரு வ. சரவணமுத்து சமாதான நீதிவான் பட்டம் கிடைத்ததை பாராட்டு முகமாக வடபிராந்திய போக்குவரத்துச்சாலையின் சகலதுறை ஊழியர்களால் கோண்டாவில் சாலையில் வரவேற்பு விழா நடைபெற்றது. இவ்விழாவுக்கு சாலை அத்தியட்சகர் திரு கு. மகாலிங்கம் தலைமை தாங்கினார்.

இவ்விழாவையொட்டி சாலை முழுவதும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சமாதான நீதிவான் பட்டம் பெற்ற திரு வ. சரவணமுத்து. சாலை ஊழியர்கள், சபைத் தலைவர் மாலை அணிவித்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். அவ்வமையம் நடைபெற்ற விழாவில் மேலும் சபைத் தலைவர் திரு கனகரத்தினம் குறிப்பிடுகையில், இலங்கை போக்குவரத்துசபை தற்போது 25 வருட பூர்த்தி விழாவைக் கொண்டாடும் இக்காலகட்டத்தில் சமாதான நீதிபதி பட்டம் கிடைத்தது எமது சாலைக்கு மட்டுமன்றி சகல போக்குவரத்துச் சாலைகளுக்கும் கிடைத்த பெரு வெற்றியாகும் என்றார்

வடபிராந்தியத்தில் செயலாற்று முகாமையாளர் திரு. க. மயில்வாகனம் பேசுகையில் திரு சரவணமுத்து அவர்கள் மக்களோடு மக்களாய் கலந்து சேவை செய்ததன் பலனே இப்பட்டம் கிடைத்தது எனவும் அவரைப்போல் ஒவ்வொரு ஊழியரும் மக்கள் சேவையை மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிட்டார், சாலை அத்தியட்சகர் திரு கு. மகாலிங்கம், தேசிய ஊழியர்மன்ற தலைவர் திரு. டனீசியஸ் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

அடுத்து நன்றி தெரிவித்து உரையாற்றிய சமாதான நீதிபதி திரு. சரவணமுத்து "எனக்கு இப்பதவி தேடியே வந்தது நான் இப்பதவியை தேடிச் செல்லவில்லை எனது கிராமத்துக்கு பல வழிகளிலும் சேவை செய்ததன் நிமித்தமே இப்பதவி கிடைக்கப்பெற்றேன். எனவே நான் எனது கிராமத்துக்கு மாத்திரமல்ல போக்குவரத்து சபைக்கும் இன்றுபோல் என்றும் சேவை செய்வேன்" என்று கூறினர். கோண்டாவில் சாலை செயலாற்று உதவியாளர் திரு. க. தியாகராசா நன்றி தெரிவித்து பேசினர். விழா இறுதியில் விருந்துபசாரமும் இடம் பெற்றது.

[துணுக்-நிரு]


வெலிங்டன்
(யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
என் அண்ணன்

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
10-30, 2-00, 4-30, 7-00, 9-30
19--25
EYE OF THE NEEDLE
Adults Only
27-2-83 முதல் குரு

சாந்தி (யாழ். நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
22—24 only
Vijeyakumaratunka—Malini
Yasa Issuru—யச இசுறு
ACTION—COLOR—SINHALA

சில தினங்கள் மட்டும்
ராணி தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
ஆந்திரா முதலமைச்சர் என். டி. ராமராவ், ஜெமினி - சாவித்திரி நடித்த
மாயா பஜார்
வருகிறது!
தேடிவந்த மாப்பிள்ளை
(புதிய பிரதி)

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
ராஜா (யாழ்- நகர்)
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன்
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி(ஈஸ்ட்மன் கலர்)
பாடசாலை பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்து தரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.
எமது அடுத்த வெளியீடு
துணி வேதுணை


## அரபுவட்டாரங்கள்:

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

இஸ்ரேலிய லெபனன் பேச்சு வார்த்தைகள் ஸ்தம்பித்து விட்டன. இதை மீண்டும் செயல்படுத்த லெபனனின் உரிமைகள் பலிக்கடாவாக்கப் பட வேண்டும். இதனை நிறைவேற்ற அமெரிக்கா தயார் என்பது அமெரிக்க ராஜாங்க காரியதரிசி ஷுல்ட்ஸ் ஜப்பான் செல்லும் மார்க்கத்தில் விமானத்திலிருந்து விடுத்த அறிக்கை தெளிவாக சுட்டிக் காட்டுகிறது" என்று அரபு வட்டாரங்கள் கூறுகின்றன

## பி. எஸ்.இராமை..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

னும் தமிழ் நாவின்பிரபல எழுத்தாளர் பி. எஸ். ராமையாவுக்கு 1982-ன் தமிழ் மொழி இலக்கியத்திற்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

'செய்தி' என்னும் மலையாள மொழியில் எழுதப்பட்ட நாவலுக்கு அளிக்கப்பட்ட தேசிய அக்கடமியின் 82-ன் விருதைப் பெற அதன் ஆசிரியர் மறுத்துவிட்டார், விருதினைப் பெற்ற தமது ஆக்கம் உரிய கௌரவத்தைப் பெறவில்லை என்று கூறி அக்கடமித் தலைவரிடம் விருதை திருப்பி ஒப்படைத்தார். [உ]

## புட்டிப்பால்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

செவ்' நிறுவனமும் கொண்டு வந்த குழந்தைகளின் புட்டிப் பால் ஊட்டும் ஊக்குவிப்பு விளம்பரங்களுக்கு இந்தியா உட்பட பல தென் கிழக்காசிய நாடுகளில் தடை ஏற்படுத்தமை கவனிக்குரிய செயலாகும்.

புட்டிப்பால் உற்பத்தியாளர்களின் பெரும் விற்பனை சந்தையாக இப்பிராந்தியங்களே விளங்குகின்றன.

எதிர் காலச்சந்ததியினரான இன்றைய குழந்தைகளின் ஆரோக்கியத்தை குழந்தைகளின் தாய்மார்கள் அழித்து வரும் செயலே புட்டிப்பால் ஊட்டும் செயலாகும். (உ)

# வலைப்பந்தாட்டப் போட்டி: அரியாலை சாம்பியன்!

(யாழ்ப்பாணம்)

விளையாட்டு அமைச்சின் ஆதரவில் யாழ், மாவட்டக் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்ட வலைபந்தாட்டப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம், சாம்பியன் பட்டத்தை தட்டிக் கொண்டது.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக வலைப்பந்தாட்டக் கோஷ்டியும், யாழ், பல்கலைக் கழக வலைப்பந்தாட்டக் கோஷ்டியும் இறுதிபாட்டத்தில் கலந்து கொண்டன. இந்த இறுதி ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம், மிகச் சிறப்பாக வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை தட்டிக் கொண்டது.

இப்போட்டி யாழ் பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

கடந்த வாரம் இலங்கை வலைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடாத்தப்பட்ட போட்டியிலும், மேற்படி இரு கோஷ்டிகளும் இறுதியாட்டத்தில் கலந்து கொண்டு அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வி)

# இன்றைய பலன்

மாசி மாதம் 12-ம் திகதி
வியாழக்கிழமை
(24—2—83)

மேடம்: உத்தியோக உயர்வுக்கு இடமுண்டு, சிலருக்கு புதிதாக தொழில் வாய்ப்புக் கிடைக்கும் நீண்டநாள் கடன் தொல்லை இன்று நிவர்த்தியாகும், தெய்வத்தின் துணையுண்டு.

இடபம்: கடமையாற்றுமிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், பயனுள்ள சந்திப்பு இன்று நிகழும். இருப்பிட மாற்றத்துக்கான ஆலோசனைகளும் உருவாகும்.

மிதுனம்: துன்பத்தின்சாயல் மனதிலே படியும், புனைந்துரைகளால் மனது புண்படும் சிலர் உதவி செய்யப்போய் உபத்திரவத்தில் மாட்டிக் கொள்வீர், சிறிய விபத்துண்டு.

கடகம்: பிரச்னைகள் மேலும் சிக்கலாகும், உணவு விடயத்தில் பிரியக்குறைவு தென்படும், கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருப்பது நன்று.

சிங்கம்; ஒளிக்கதிர்கள் உங்கள் வாழ்க்கையில் பரவும், உல்லாசமாகப் பொழுது போக்க விரும்புவீர்கள், குழந்தைகளினால் மகிழ்ச்சியுண்டு, கணவன்மனைவி அன்பு தவழும்.

கன்னி: சிந்தனை அலைமோதும், செய் தொழிலில் பதட்டநிலை தென்படும், அவசர முடிவின் மூலம் குறை கேட்க நேரிடும், பலவழிகளிலும் பணம் விரயமாகும்

துலாம்: நல்லதைச் செய்வீர்கள், நலன்கள் பெருகும், பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள், சமூகத்தில் மதிப்பு உயரும், வாகனம் ஓட்டுவோர் நன்மை அடைவார்கள்.

விருச்சிகம்: மதிப்பு உயரும், இல்லத்தில் இனிமை தவழும், அறிஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், எவ்வித சிக்கலான பிரச்னையையும் பேச்சுவன்மையினால் சமாளிப்பீர்கள்.

தனு: பட்சமாகப் பேசுபவர்களே பக்கத்தில் படுகுழி தோண்ட முனைவர், ஆணவப் போக்கு மற்றவர்களின் வெறுப்பைத் தேடித்தரும், பெண்ணொருத்தரின் கவலை அதிகரிக்கும்.

மகரம்: கருத்து வேற்றுமைகள் மறையும், பல வழிகளிலும் பொருள் வரவுக்கு இடமுண்டு, வாழ்வில் உற்சாகம் பிறக்கும், வருங்காலம் வளமாக அமைய வழி வகுப்பீர்கள்.

கும்பம்: போட்டா போட்டிகளில் ஈடுபடுவதன் மூலம் பணம் பாழாகலாம், முகமன் கூறுவோர் விடயத்தில் எச்சரிக்கையயிருக்கவும் விவசாயிகள் கடன்பட நேரிடலாம்.

மீனம்; புத்திரர் புகழ்சேரும் பிதாவழித் தனதானிய விருத்திக்கும் இடமுண்டு, வாய்வுப் பதார்த்தங்களை நீக்கிக் கொள்ளவும், கல்வியில் முன்னேற்றமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
பருத்தித்துறை

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற விஷ்ணுசுந்தரம், பாலசுந்தரம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தினதும், உரிமைப் பொருட்களினதும் விடயத்தில்,

—மரணமெய்தியவர்.

திருமதி ஞானேஸ்வரி பாலசுந்தரம், 65, யாழ்ப்பாண வீதி, வல்வெட்டித்துறை.

—விண்ணப்பகாரர்.

மரணசாதன
நியாயாதிக்கம்:
இல: 1163/ரீ

எதிராக

பராயமற்றவர்கள்:

1. பாலசுந்தரம் மகள் மாலதி
2. பாலசுந்தரம் பிரதீபன்
3. பாலசுந்தரம் பத்தீபன்
4. சிற்றம்பலம் விஷ்ணுசுந்தரம் யாவரும் இல: 65, யாழ்ப்பாண வீதி, வல்வெட்டித்துறை

—எதிர்வாதிகள்

மேலே இலக்கம் கொண்ட மரணசாதனமில்லா மரணச் சொத்தினதும், உரிமைப் பொருட்களினதும் விடயமாக வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் ஆதனங்கட்கும், ஆஸ்திகளுக்கும் பரிபாலன அதிகாரத் தத்துவப் பத்திரம் பெறுவதற்கு மேற்படி மன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு மாசி மாதம் 25ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இம்மன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1983ம் ஆண்டு மாசி மாதம் 21ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
வி. செல்வராஜா,
பதிவாளர்.

வரைவு:
க. சோ. சிவனருள்சுந்தரம்,
விண்ணப்பகாரரின்
சட்டத்தரணி. 6282

## யாழ்..

[4ம் பக்கத் தொடர்ச்சி]

மற்றும் கழிவு பொருட்களும் யாழ். நகர இறைச்சிக்கடைக்காரர்கள் சிலரால் தினமும் கொட்டிக்குவிக்கப்படுகின்றன. இதனால் ஏற்படும் துர்நாற்றமும் சுகாதார அபாயமும் சகிக்கமுடியாததாகும். இது பற்றி இரண்டு முறை பத்திரிகைகளில் படங்களோடு செய்திகள் வெளியாகியும்கூட யாழ். மாநகராட்சி மன்றத்தினர் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. குற்றமிழைக்கும் இறைச்சிக்கடைக்காரர்களைக் கேட்டால், மாநகராட்சி மன்றத்தின் அனுமதியோடுதான் தாங்கள் எலும்புகளையும் குடல்களையும் கடலுக்குள் கொட்டுவதாகக் கூறுகிறார்கள். இது என்ன அநியாயம்? மக்களின் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் செயலுக்கு மன்றத்தினர் உடந்தையானவர்களா? அல்லது மன்றத்திலுள்ள சிலருக்கு இறைச்சிக்கடைக்காரர்கள் வேண்டியவர்களா?

யாழ், நகரப்பகுதியில் மக்கள் அதிகமாகவும் நெருக்கமாகவும் வாழும் பகுதிகள் இலவற்றில் வீடோ, நிலமோ அற்ற மக்கள் அநேகர், அவர்களில் சிலர் அரசகாணிகளில் ஓலைக் குடிசைகள் அமைத்து வாழ முற்படும்போது திரும்பத் திரும்ப யாழ் மாநகராட்சி மன்றத்தினர் அந்தக் குடிசைகளைப் பிடுங்கி எறிந்து வருகின்றனர். இந்த மக்கள் எங்கு போவார்கள்?

இ பொழுது தெருக்களுக்கு தாரை வார்க்கிறார்கள், மன்றத்தினர். ஏன் தெரியுமா? இவ் வருடம் மாநகராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறப் போவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. அதனால் போலும்.

முன்னரெல்லாம் தெருக்கள் திருத்தப்படும்போது அவற்றிலுள்ள குழிகளில் கற்களைப் போட்டு இயந்திர உருளையால் அல்லது கை உருளையால் அல்லது 'மொங்கான்' என்னும் கருவியால் குழிகளில் போடப்பட்ட கற்களை நன்கு நசித்து இறுக்கி மட்டப்படுத்தி, அதன் பின்னரே தார் ஊற்றப்பட்டு மேலே மண் தூவப்படும். இப்போது நடைபெறும் தார்வார்ப்பில், குழிகளில் கற்களைக் குவித்து அவற்றை உருளையாலோ அல்லது மொங்கானாலோ இறுக்காது வெறுமனே தார் ஊற்றப்படுகிறது. இதனால் தெருக்கள் எப்படி மாறி வருகின்றன தெரியுமா? முன்னர் குழிகளாகக் காட்சியளித்த இடங்களெல்லாம் இப்போது மேடுகளாகக் காட்சியளிக்கின்றன. உருளை செய்ய வேண்டிய வேலையை இனிமேல் வாகனங்களின் சில்லுகளுக்கும், பாதசாரிகளின் செருப்புகளுக்குமே சேதம்.

-கி. யோண்

மத்தியகிழக்கு வீதி,
றெக்கிளமேசன்,
குருநகர்.


# ஹோம் பிறுன்ஸ்

லிமிட்.

82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

## மெக்கானிக் தேவை

எமது நெடுந்தூரப் பயண பஸ்களில் நாளாந்த வேலை செய்வதற்கு அனுபவமுள்ள மெக்கானிக் ஒருவர் தேவை.
சான்றுகளுடன் உடனடியாக விண்ணப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்


வட்டக்கச்சியில் பரபரப்பு

# கணவனைப் பிரிந்து வாழ்ந்த இளம்பெண் மர்ம மரணம்

## இராசதுரை என்பவர்மீது சந்தேகம்

(கிளிநொச்சி)

கணவனைப் பிரிந்து 11 வயது மகனுடன் தனிமையில் வாழ்ந்து வந்த பெண் வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இச்சம்பவம் வட்டக்கச்சியில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வட்டக்கச்சி விக்சன் வீதியைச் சேர்ந்த புஷ்பநாதன் மகேஸ்வரி (35 வயது) என்ற பெண்ணே மர்மமானமுறையில் மரணமானவராவார்.

மரணமானவரின் கழுத்தைச் சுற்றித் தழும்பு காணப்பட்டது.

கிளிநொச்சி நீதவான் திரு. ஏ. கதிரவேற்பிள்ளை நேற்று மரண விசாரணை நடத்தினார்.

அடிக்கடி தங்கள் வீட்டிற்கு வந்து செல்லும் இராசதுரை அல்லது சின்னத்துரை என்பவர் மீது தமக்கு சந்தேகம் இருப்பதாக இறந்த பெண்ணின் 11 வயது மகன் மகிழலிங்கம் நீதவானிடம் தெரிவித்துள்ளார்.

மரண விசாரணையில் மகிழலிங்கம் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:-

''சம்பவதினம் நான் பள்ளிக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பினேன். முன் கதவு சாத்தப்பட்டிருந்தது. நான் பின் பக்கம் சென்று கதவைத் திறந்து பார்த்தேன் அம்மா மல்லாந்தபடி படுத்திருந்தார். தண்ணீர் எடுத்து முகத்தில் தெளித்தேன் பேச்சு மூச்சு இல்லை கையைத் தொட்டுப் பார்த்தேன் குளிர்ந்திருந்தது. சத்தம்போட்டுக் குளறினேன். அயலவர்கள் வந்தார்கள்.

''அம்மா, அப்பாவைப் பிரிந்து தனிமையில் வாழ்ந்து வந்தார். இராசையா அல்லது சின்னத்துரை என்பவர் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவார். அவர் மீது சந்தேகப்படுகிறேன்.''

சந்தேகநபரான சின்னத்துரையைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (அ)

## ஐ. நா. உலக...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பல்படுத்தப்படுவதன் மூலமே சர்வதேச ரீதியிலான வர்த்தகத்தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளமுடியும்.

''இந்தோனேஷியாவைப் பொறுத்தவரையில் பனங்கைத்தொழிற் துறை விரிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் பனையைக் கூடுதலாகக் கொண்ட நாடுகளின் அளவுக்கு முன்னேற்றமும் கண்டுள்ளது. நவீனமயப்படுத்தப்பட்ட பனம் உற்பத்தித்துறை உலகளாவிய ரீதியில் விரிவுபடுத்தப்பட்டு ஏற்றுமதி வர்த்தகத்திற்கான நிலையையும், தரத்தையும் அடையவேண்டும்.

''தற்போது சர்வதேசரீதியிலான பனைவளமகாநாடு இலங்கையில், பனைமரத்தைக் கூடுதலாகக் கொண்டுள்ள யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது பனங்கைத்தொழிற் துறையில், கூட்டிணைப்பை ஏற்படுத்துவதற்கான முன்னோடியாக அமைகின்றது என்பதே எமது அபிப்பிராயமாகும். இத்தகைய ஒரு மகாநாடு இலங்கை நாட்டிற்குப் பெரிதும் பயனளிக்கும். இலங்கையில் பனம் பொருள் அபிவிருத்திச்சபை பனை அபிவிருத்தியிலும், பனம் பொருளாதார முன்னேற்றத்திலும் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பாராட்டிற்குரியன. இங்கு நான் கண்ட புதிய அனுபவங்களை எனது நாட்டிற்கும் எடுத்துச் செல்வேன்.''

## ''பலம்வாய்ந்த...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சிவசிதம்பரம், கோப்பாய் எம். பி. திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் சுடப்பட்டது சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையில் கவலை தெரிவித்துள்ளார்.

திரு. சிவசிதம்பரம் நேற்றுக் காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்ததும் உடனடியாக யாழ் ஆஸ்பத்திரிக்குச் சென்று திரு. ஆலாலசுந்தரத்தைப் பார்வையிட்டு ஆறுதல் கூறினார் பின்னர் இதுசம்பந்தமாக அறிக்கை ஒன்றை விடுத்தார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''தீவிரவாதமென்பது, நாம் ஒருவரை ஒருவர் அழித்துக்கொள்வதுதானா என்பதனை வாலிபநண்பர்கள் தயவு செய்து சிந்திக்குமாறு வேண்டுகின்றேன்.

''இப்படியான தனிப்பட்ட வன்செயல்களினால் எமது இலட்சியத்தை அடையமுடியாது என்பது கூட்டணியின் நம்பிக்கை. இருப்பினும் எமது இளைஞர்கள் சிலரின் ஆழ்ந்த இனப்பற்றையும், துணிவையும், செயலாற்றலையும் என்றும் நாம் மதித்துள்ளோம்.

''நண்பர் திரு. ஆலாலசுந்தரம் இந்தவகையில் யாருக்கும் சளைத்தவரல்ல. இச்சம்பவங்களுக்கு நமது இளைஞர்கள் கொடுக்கின்ற பரிசு துப்பாக்கிக் குண்டுதான் என்றால் நாம் அதனையும் ஏற்கத்தயார். ஆனாலும் இது எங்களுக்குள் கட்சி மோதல்களுக்குத்தான் வழிவகுக்கும். இந்நிலையினால் நமது இனத்தின் எதிர்காலம் என்ன ஆகுமென்பதை எமது இளைஞர்கள் சிந்திக்கவேண்டும்.

''தமிழ் மக்களின் ஒரே அமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணி.

''தமிழீழ இலட்சியத்தை அடைவதற்கு இந்த இயக்கம் தான் முடிவெடுக்கவேண்டும். எக்காரணம் கொண்டும் எந்தப் பயமுறுத்தல்களுக்காகவும் நாம் எமது பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது இனத்தினுடைய எதிர்காலத்தின் முடிவுகளை எடுக்கின்ற பொறுப்பை ஒரு சில இளைஞர்களிடம் விட்டுக் கொடுத்தால் நாம் எமது கடமையிலிருந்து தவறியவர்களாவோம். நாம் எடுக்கின்ற முடிவுகள் பிழையாயின் அதைத் திருத்துவதற்கோ அல்லது வேறு முடிவுகள் எடுப்பதற்கோ கூட்டணியின் அமைப்பு விதி தாராளமாக இடம் கொடுக்கின்றது. எனவே நான் எமது வாலிபர்களைப் பணிவாக வேண்டுகிறேன், நீங்களே சாட்சிகளாக – நீங்களே வழக்காளிகளாக – நீங்களே நீதிபதிகளாக துப்பாக்கி முனையில் தீர்ப்பு வழங்குகின்ற வழக்கத்தைக் கைவிடுங்கள்.

''எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு ஒற்றுமையான பலம்வாய்ந்த இயக்கத்தைக் கட்டியெழுப்பியிருக்கின்றோம். அதைச் சின்னாபின்னமாக்காதீர்கள். அப்படி ஆகின் அதன் லாபம் எமது அரசியல் எதிரிகளுக்கே! துப்பாக்கி முனையில் தீர்வுகாணும் முயற்சியைக் கைவிட்டு கட்டுக்கோப்பாக இயக்கத்துடன் இணைந்து செயல்படுவோம்.''

(மா)

## யாழ் நகரில் ஷேக்ஸ்பியர் நாடகம்

(யாழ்ப்பாணம்)

லண்டன் ஷேக்ஸ்பியர் குழுவினரின் ''டுவெல்த் நைற்'' நாடகம், இன்று யாழ் நகரில் மேடையேற்றப்படுகிறது

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இன்று மாலை நடைபெறும் இந்த நாடகத்தைப் பிரிட்டிஷ் கவுன்சில் அளிக்கிறது

தூர இடங்களிலிருந்துவரும் ரசிகர்களின் வசதி கருதி கல்லூரியிலிருந்து சில முக்கிய பாதைகளில் பஸ் சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

## நிறைவேற்றுக்குழு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்துக்குச் செல்வீர்களா என்று நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''நிறைவேற்றுக்குழுவிற்கு ஒருவரை நியமனம் செய்வதற்கு முன் சபைத் தலைவரின் ஆலோசனை பெறப்பட்டிருக்கவேண்டும். அப்படியில்லாமல் சபையின் சட்டதிட்டங்களை மீறி இந்தநியமனம் இடம் பெற்றுள்ளது'' என்றும் தெரிவித்தார். [அ]

## ஆலால்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் தெரியவரும் என்று சத்திர சிகிச்சை மேற்கொண்ட டாக்டர் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

முழங்காலில் பாய்ந்த குண்டு வெளியேறியதால் எதுவித ஆபத்தும் ஏற்படாது என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் திரு. ஆலாலசுந்தரம், கல்வியங்காட்டிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து இன்னும் தெரியாத நான்கு இளைஞர்கள் கொண்ட கோஷ்டி ஒன்றினால் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கானது தெரிந்ததே.

யாழ். பொலிசார் விசாரணைகளை நடாத்தி வருகின்றனர். [மா]


# ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்

## உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22370—22438—22537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி
தொலை பேசி இல; 22273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105,ஒல்கொட் மாவத்தை,புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல; 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் [illegible] 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office [illegible] Q.B. 100236/81 Eelanadu - P. O. Box 49. Telegram: Eelanadu, Telephone: 22389 — 24126.